Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 36/2026**

வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | கிராமம் | : | மொரப்பூர் |
| தந்தை பெயர் | : | குன்னிகவுண்டர் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 53 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09**th** Day of **June 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மொரப்பூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 11.10.2024ம் தேதி காலை சுமார் 11.30 மணிளவில் காவல் உதவி ஆய்வாளர் நந்தினி அவரது தலைமையில் நானும் அசா1ம் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக மொரப்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியான ராணிமூக்கனூர் கிராமத்தில் கண்காணித்து கொண்டு இருந்த போது எதிரி அம்சா என்பவர் அண்ணா நகர் பேருந்து நிறுத்தத்தில் ஒரு பையில் எதையோ மறைத்து வைத்திருந்தார். போலீசார் எங்களை கண்டதும் தப்பியோட முற்பட்டபோது நாங்கள் அவரை பிடித்து

சோதனை செய்த போது **பையில் 180ml old chef பிராண்டி பாட்டில் -26** இருந்தது எதிரியிடம் கேட்ட போது எதிரி அரசு மது பான கடையில் வாங்கி பொது மக்களுக்கு அதிக விலைக்கு சில்லரை விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதாக கூறினார். காவல் உதவி ஆய்வாளர் எதிரியை அந்த இடத்திலேயே கைது செய்து தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து **பையில் 180ml old chef பிராண்டி பாட்டில் -26** கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். அந்த இடத்திலேயே கொட்டி அழித்து கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் அசா1 ஆகியோரும் கையொப்பம் இட்டோம்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசர் உடன் இணைந்த அழித்தல் மகசர் ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தார் மேலும் எதிரியுடன் நிலையம் வந்தடைந்து காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார்.

வழக்கு தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் பேருந்து நிறுத்தத்தில் நடந்தது என்றால் சரிதான். அங்கு மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். தனி நபர் யாரேனும் அதிகவிலைக்கு மதுபாட்டில்களை எதியிடம் இருந்து வாங்கியதாக சொன்னார்காள

என்றால் இல்லை. போலீசாராகிய எங்களை கண்டதும் அனைவரும் அங்கிருந்து தப்பித்து சென்றுவிட்டார்கள். எதிரி கையில் வெள்ளைநிற சாக்கு பை வைத்திருந்தார். அந்த பையை இந்த வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். பின்பு எதிரியை கைதுசெய்துவிட்டு காவல் நிலையம் வந்துவிட்டோம் பின்பு கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரிதான். பின்பு பஸ் நிறுத்தத்தில் இருந்த நபர்களை விசாரணை செய்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து எங்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்த 26 பாட்டில்களை காவல் நிலையத்திற்கு கொண்டுவந்தோம். கைப்பற்றுதல் மகசர் மற்றும் படிவம் 91 ஆகியவற்றை காவல் நிலையத்தில் தயார் செய்து கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. மதுபாட்டில்களை யாருக்கு விற்பனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**